விட்டால்தான் அந்த வீடுகள் காலியாகும். அப்போதுதான் வெளியே காத்துக்கொண்டிருக்கிற புதிய தொழிலாளர்கள் அங்கே போய் குடிபோகமுடியும். அதற்காகத்தான் அந்த வீடுகள் இருக்கின்றன.

திரு. ப. நெடுமாறன் : தொழிலாளர்கள் குடியிருப்புகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான பாலிசி அனவுன்ஸ்மென்ட்டை செய்திருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி எழுத்தர்களுக்கு குடியிருப்புகளை அந்த எழுத்தர்களுக்கே மாநகராட்சி கொடுத்திருக்கிறது. ஆனால் அங்கே வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு அந்தக் குடியிருப்புகளை கொடுப்பதற்கு முன்வரவில்லை. ஏற்கெனவே எழுத்தர்களுக்கு கொடுத்திருக்கிற அந்தச் சலுகைகளை கீழ் மட்டத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது மாநில அரசின் கொள்கைப்பற்றி. இந்த மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தபொழுது பரிசீலனை செய்தது. அவைகள் வாடகை வீடுகள். It is not a hire-purchase system. It is only a rental scheme. Rent l scheme என்ற முறையிலே வாடகை வீடுகள் என்று தான் குடிபோகிறார்கள். அவர்களைத் தவிர வெளியே இருக்கிற எஞ்சிய தொழிலாளர்களுக்கும் அந்த பலன் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் 'ரெண்டல் ஸ்கீமை' 'ரெண்டல்' ஸ்கீமாக வைத்திருக்கிறோம். மதுரையிலே hire purchase-ல் Lower-income group, M.I.G., economically weaker sections என்ற அடிப்படையிலே வீடு கட்டுகிறோம். அதிலே இவர்கள் பதிவு செய்து அந்த வீடுகளை பெறலாம்.

வேகவதி—பாலாறு இணைப்புத் திட்டம்.

*வினா எண் 370—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேகவதி-பாலாறு இணைப்புத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் முதல் நிலை-ஆய்வில் உள்ளதால், திட்ட மதிப்பீடு பற்றிய விபரங்கள் தற்போது இல்லை.

1981 மார்ச் 4]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நிலையிலேதான் இந்தத் திட்டம் இருக்கிறது. ஆய்வு விரைவில் முடிக்கப்படும் என்ற தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி அரசு முடிவு செய்யும்.

கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறை அணை.

*வினா எண் 371—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுக்காவில் மாம்பழத்துறை அணை கட்டுவதற்காக அரசு மேற்கொண்ட ஆய்வு தற்போது எந்த நிலையிலிருக்கிறது?

(ஆ) அணை கட்டுவதற்கான வேலைகள் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறை யாற்றில் அணைகட்டும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை. எனினும், மாம்பழத்துறையாற்றின் உபரிநீரை திருப்பிவிட்டு, பத்மநாபபுரம் புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டுகளின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. திருப்பிவிடுவதற்கான உபரிநீரின் அளவு மிகவும் குறைவு என்றும், எதிர்பார்க்கப்படும் பயன்களும் அதிகமில்லை என்றும், எனவே இத்திட்டத்தை கைவிடலாமென சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்த கருத்தை ஏற்று அரசு இத் திட்டத்தை கைவிட்டது.

திரு. குமரி அனந்தன் : ஏற்கெனவே இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்து அந்த நீரைத் திருப்பிவிட்டு அமைச்சர் சொன்ன பகுதிகள் பயன்பெறும் என்று சொல்லி முடிவு செய்யப் பட்டிருக்கிறது என்பதை பல ஆண்டுக்காலத்திற்கு முன்னாலேயே அறிக்கை மூலமாக நாங்கள் அறிந்து இருக்கிறோம். அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கிற முயற்சிகளிலே ஈடுபடுவார்களா?